# KONGUNADU ARTS AND SCIENCE COLLEGE (AUTONOMOUS)

## G.N.Mills Post, Coimbatore – 641029.

### Students Welfare Centre

SWC of our college organized a Tamil Debate on the occasion of Pongal Day Celebrations on 09.01.2017in the college auditorium. The title for the debate was "Human values are mended by Friendship or Kinship?".Thiru.T.Ramalingam,Senior Advocate, Madras High Court, Chennai was the chief guest and the judge for the event. Students defended their team with factual details and thought provoking quotes. The judge praised both the team members with positive comments and a nice judgment.



Dr. K. MURUGESAN
Director
Students Welfare Centre
Kongunadu Arts and Science College
Coimbatore - 641 029.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(7)

அனுப்புநர்
திருமதி. ந. சரஸ்வதி, M.A., B.Ed.,
இணைச் செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை-600 003

பெறுநர்
Dr.K.Muthukumar
Asst.Professor Dept. of Tamil
முதன்மைக் கண்காணிப்பாளர்,
Kongunadu Arts and Science College
G.N.Mills
Coimbatore
Hall No. 31

கடித எண்.1586/ஏபிடி-ஏ/தொகுதி-I /2016, நாள். 08.02.2017

அய்யா / அம்மையீர்,

பொருள்: தேர்வுகள் தொகுதி-I 2016 (Group-I) முதனிலைத் தேர்வு - முழுவதும் பார்வையற்ற / மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுத உதவியாளர் கோரியது - உதவியாளர் நியமித்தல் - தொடர்பாக.

---------

19.02.2017 அன்று முற்பகல் மட்டும் நடைபெறவிருக்கும் தொகுதி-I 2016 முதனிலைத்தேர்வு எழுத முழுவதும் கண்பார்வையற்ற / மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள் தங்களது தேர்வுக் கூடத்தில் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

| வரிசை எண். | விண்ணப்பதாரரின் பெயர் | பதிவெண் |
|---|---|---|
| 1. | R GOPALAKRISHNAN | 020031148 |

மேற்படி விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்களை தங்களது நேரடி மேற்பார்வையின் கீழ் தனி / தனித்தனி அறையில் தேர்வெழுத அனுமதிக்கப்பட வேண்டும். தேர்வு எழுதுவதற்கு 1/2 மணி நேரம் (30 நிமிடம்) கூடுதலாக வழங்கப்படவேண்டும். இவ்விண்ணப்பதாரர் முழுவதம் கண்பார்வையற்ற / மாற்றுத் திறனாளி என்பதால் தேர்வு எழுதுவதற்கு உதவியாளர் தேவை எனக் கோரப்பட்டுள்ளதால், அவரது சார்பாக அவர் கூறும் விடைகளை எழுதும் பொருட்டு ஒரு உதவியாளர் (Scribe) நியமிக்கப்படவேண்டும். உதவியாளருக்கான ஊதியம் ரூ.400/-ஐ தேர்வாணையம் வழங்கும். இந்த தொகைக்கான பற்றுச்சீட்டினை (Voucher) தனியே தேர்வாணைய அலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும். மேலும், விண்ணப்பதாரர் வாய்மொழியாகக் கூறியதைத்தான் உதவியாளர் விடைத் தாளில் எழுதியுள்ளார் என்பதை உறுதி செய்யும் பொருட்டு விண்ணப்பதாரரிடம் உதவியாளர் தான் எழுதியதைப் படித்துக் காட்ட வேண்டும். தான் கூறிய விடைகளைத் தான் உதவியாளர் எழுதியுள்ளார் என்பதை உறுதி செய்யும் வகையில் ஒரு சான்றிதழ் பெறப்படவேண்டும். அச்சான்றிதழில் விண்ணப்பதாரரின் இடதுகைப் பெருவிரல் ரேகை அல்லது கையொப்பம் பெற்று, அதில் தாங்கள் மேலொப்பம் இட்டு தேர்வாணையத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

மேலும், தேர்வு எழுதும் விண்ணப்பதாரர்களைக் கண்காணிக்கும் பொருட்டு தேர்வுக் கூடங்களை முழுமையாகப் பதிவு செய்ய நியமிக்கப்படும் படம் எடுப்பவரை (Video Grapher) மேற்கண்ட விண்ணப்பதாரர் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருக்கும் அறைக்கு அடிக்கடி சென்று பதிவு செய்யும்படியும் மேற்படி வழிமுறைகள் அனைத்தையும் சரியாகப் பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு : இல்லை.

இணைச் செயலாளருக்காக

## கல்லூரிக் கல்வித் துறை

அனுப்புநர்

முனைவர் க. பரமேஸ்வரி, எம்.எஸ்சி., எம்.பில்., எம்.எட்., பிஎச்.டி.,
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
கோவை மண்டலம்,
கோவை – 641 018.

பெறுநர்

முதல்வர்,
கொங்குநாடு கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
கோவை.

ந.க.எண்.1530/அ3/2017 நாள் : 12.04.2017

அய்யா/அம்மையீர்,

பொருள் : கல்லூரிக் கல்வித் துறை – TN SET 2017 – 23.04.2017 அன்று நடைபெறுதல் – தேர்வு மையம் ஒதுக்கீடு மற்றும் தேர்வர்களின் எண்ணிக்கை விவரங்கள் அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை :
1. அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழக ஆய்வு மற்றும் விரிவாக்க மையம், சென்னையில் 07.04.2017 அன்று நடைபெற்ற கூட்டக்குறிப்பு.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.10.04.2017.

-----

TN SET 2017 தேர்வுகள் 23.04.2017 அன்று நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு தங்கள் கல்லூரி தேர்வு மையமாக தெரிவு செய்யப்பட்டு, அவ்விபரம் பார்வை 2ல் காணும் இவ்வலுவலக கடித வாயிலாக அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. தங்கள் கல்லூரிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வர்களின் எண்ணிக்கையை பின்வருமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

| வ. எண். | கல்லூரியின் பெயர் | தேர்வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கொங்குநாடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை | 1016 |

23.04.2016 அன்று நடைபெறவுள்ள TN SET 2017 தேர்வுக்கான அனைத்து முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு, மேற்படி தேர்வினை சிறப்பாக நடத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

K. Parameswari 12/4/17
கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
கோவை மண்டலம், கோவை–18.